016860

**சுருக்கம்**

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் – சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயனடைந்து வரும் 1–ஆம் வகுப்பு முதல் 10–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு முக்கிய பிரமுகர்களின் பிறந்த நாளன்று மதிய உணவுடன் இனிப்புப் பொங்கல் வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை,**

அரசாணை (நிலை) எண்.39

நாள் 11.06.2024
திருவள்ளுவர் ஆண்டு 2055
வைகாசி 29

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.27, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந7(1)) துறை, நாள் 15.05.2023.
2. சமூக நல ஆணையர் அவர்களின் கடித ந.கஎண்.9393/சஉதி2(1)/2023, நாள் 10.01.2024.

-----

ஆணை:–

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட ஆணையில், குழந்தைகள் மையங்களில் சத்துணவுத் திட்டத்தில் பயனடைந்து வரும் 2 முதல் 6 வயது குழந்தைகள் மற்றும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் பயன்பெறும் பள்ளிக் குழந்தைகளுக்கு, டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் பிறந்த நாளன்று இனிப்புப் பொங்கல் வழங்கவும், குழந்தைகள் மையங்கள்/சத்துணவு மையங்களில் பயனடைந்து வரும் குழந்தைகளுக்கு நாள்தோறும் சத்துணவிற்காக அனுமதிக்கப்பட்டுள்ள அரிசியின் அளவில் அரிசி பயன்படுத்தவும், இனிப்புப் பொங்கல் வழங்க தேவைப்படும் வெல்லம் மற்றும் இதர பொருட்களை அங்கன்வாடிப் பணியாளர்கள்/சத்துணவு அமைப்பாளர்கள் இனிப்புப் பொங்கல் வழங்கப்படும் நாளின் உணவூட்டுச் செலவினத்திற்குள் (எரிபொருள் நீங்கலாக) வாங்குவதற்கு அனுமதி அளித்து ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், முக்கிய பிரமுகர்களின் பிறந்த நாளன்று மாணவர்களுக்கு இனிப்புப் பொங்கல் மட்டும் தற்போது வழங்கப்பட்டு வருகிறது என்றும், ஆனால், மதிய உணவு வழங்கப்படுவதில்லை என்றும் சமூக நல ஆணையர் தெரிவித்துள்ளார். இந்நிலையில், மாணவர்களுக்கு முழுமையாக மதிய உணவும் உட்கொள்ளும் வகையில், இனிப்புப் பொங்கலுடன் மதிய உணவும் சேர்த்து வழங்கலாம் என்றும், இதனடிப்படையில், தொடக்கப்பள்ளி

த.பி.பா.,

பயனாளிகளில் ஒரு மாணவருக்கு, மதிய உணவிற்கென தேவைப்படும் அரிசியின் அளவில், 100 கிராமில் 25 கிராமும் மற்றும் உயர்நிலைப் பள்ளி பயனாளிகளில் ஒரு மாணவருக்கு மதிய உணவிற்கென தேவைப்படும் அரிசியின் அளவில், 150 கிராமில் 50 கிராமும் இனிப்புப் பொங்கலுக்கென ஒதுக்கலாம் என்றும், இதர பொருட்களான பாசிப்பருப்பு, வெல்லம், நெய், முந்திரி மற்றும் ஏலக்காய் ஆகியவற்றிற்கு ஒரு மாணவருக்கு ரூ.2/-வீதம், இனிப்புப் பொங்கலுக்கு என ஒதுக்கலாம் என்றும், மேற்கண்டவாறு இனிப்புப் பொங்கலுடன் மதிய உணவும் சேர்த்து வழங்கிட ஏற்படும் கூடுதல் செலவினம் வழங்க ஆகும் விவரங்களை சமூக நல ஆணையர் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:-

| மையங்களின் எண்ணிக்கை | மொத்த மாணவர்களின் எண்ணிக்கை | ஒரு மாணவருக்கு ஆகும் செலவினம் (பாசிப்பருப்பு, வெல்லம், நெய், முந்திரி மற்றும் ஏலக்காய் மட்டும்) ரூ. | ஓராண்டில் ஒரு நாளுக்கு ஏற்படும் செலவினம் ரூ. | ஓராண்டில் 5 நாளுக்கு ஏற்படும் செலவினம் ரூ. |
|---|---|---|---|---|
| 43131 | 4271953 | 2 | 85,43,906 | 4,27,19,530 |

3. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயனடைந்து வரும் 1 ஆம் வகுப்பு முதல் 10-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/ மாணவியர்களுக்கு, முக்கிய பிரமுகர்களின் பிறந்த நாளன்று மதிய உணவுடன் இனிப்புப் பொங்கல் வழங்கிட அனுமதித்து ஆணையிடுமாறும், இதற்கு ஆகும் கூடுதல் செலவினம் ரூ.4,27,19,530/-ஐ (ரூபாய் நான்கு கோடியே, இருபத்து ஏழு இலட்சத்து, பத்தொண்பதாயிரத்து, ஐந்நூற்று முப்பது மட்டும்) ஒப்பளிப்பு செய்யுமாறும் சமூக நல ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேலே பத்தி 3-இல் உள்ள சமூக நல ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்று, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயனடைந்து வரும் 1 ஆம் வகுப்பு முதல் 10-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு முக்கிய பிரமுகர்களின் பிறந்த நாளன்று மதிய உணவுடன் இனிப்புப் பொங்கல் வழங்குவதற்கும், இதற்கு ஆகும் கூடுதல் செலவினம் ரூ.4,27,19,530/-ஐ (ரூபாய் நான்கு கோடியே, இருபத்து ஏழு இலட்சத்து, பத்தொண்பதாயிரத்து, ஐந்நூற்று முப்பது மட்டும்) 2024-2025-ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியொதுக்கத்திற்குள் செலவினம் மேற்கொள்வதற்கும் சமூக நல ஆணையருக்கு அனுமதி அளித்து ஆணையிடப்படுகிறது.

5. இவ்வரசாணை நிதித் துறையின் அ.சா.எண்.e-file No.6517235/ நிதித் (ச.ந.)துறை/2024, நாள்.27.03.2024-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெயஸ்ரீ முரளிதரன்
அரசு செயலாளர்

பெறுநர்,
சமூக நல ஆணையர், சென்னை-5.
ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை-3.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம், சென்னை-10.
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், சென்னை-34.
பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை-28.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை.6.
சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சமூக நல ஆணையர் வழியாக).
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-35.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை-18.
முதன்மை மாநிலக் கணக்காயர், (தணிக்கை-I/II), சென்னை-18.
சம்மந்தப்பட்ட மாவட்டக் கருவூல அலுவலர்கள் (சமூக நல ஆணையர் வழியாக).
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை-9.

நகல்.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
தலைமைச் செயலாளர் அவர்களின் முதன்மை தனிச் செயலர், சென்னை-9.
மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
மாண்புமிகு சமூக நலன் - மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளர் நிதித் துறை அவர்களின் முதுநிலை முதன்மை தனிச் செயலர், சென்னை-9.
அரசு செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அவர்களின் முதன்மை தனிச்செயலர், சென்னை-9.
நிதித் துறை, சென்னை-9.
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (ச.ந.7) துறை, சென்னை-9.
இருப்புகோப்பு/உதிரிநகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

12/06/2024

பிரிவு அலுவலர்

12.6.2024